# DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.302/2015**

Deposition of :PW -25

| | | |
|---|---|---|
| Name | : Dr. கோகுலரமணன் | Caste: |
| Father's / Husband Name: | | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 8th day of April 2025

A1, A3 to A6 present.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவ கல்லூரி மருத்துவனையில் சட்டம்சாாந்த மருத்துவ துறையில் பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.09.2014 அன்று நான் அதே துறையில் பணியில் இருந்தபோது ஆட்டையாம்பட்டி காவல்நிலைய ஆய்வாளர் அவரிடமிருந்து கு.எண்.315/2014 என்ற வழக்கில் சம்மந்தப்பட்ட சுமார் 60 வயது நிறைந்த விஜயன் என்கிற ஆண் பிரேதத்தை சடலகூராய்வு செய்ய கொடுத்த வேண்டுகோள் கடிதத்தினை பெற்று சடலத்தை சிறப்பு உதவி ஆய்வாளர் ராஜமாணிக்கம் அடையாளம் காட்ட அன்றைய தினமே மதியம் 3.15 மணிக்கு சடலகூராய்வை ஆரம்பித்தேன். மேற்படி வேண்டுகோள் கடிதம் மற்றும் வழக்கின் வரலாறு மற்றும் படிவம் 86 அ.சாஆ.30.

பிரேத்தின் மரணவிரைப்பு தன்மை உடல் முழுவதும் காணப்பட்டது.

வெளிப்புற கூராய்வு

கீழ்கண்ட வெளிப்புற காயங்கள் காணப்பட்டன.

1. வலது ஆள்காட்டி விரலில் ஒரு வெட்டு காயம் 1.5 cmx0.7x0.5 என்ற அளவில்

காணப்பட்டது.

2. வலது உள்ளங்கையின் நடுவே ஒரு வெட்டு காயம் 1.5x0.5x0.5 cm அளவில் காணப்பட்டது.

3. ஒரு அகலமான, ஆழமான வெட்டுகாயம் கழுத்தின் முன்பகுதி மற்றும் இரண்டு பக்கங்களிலும் 12 cmx5 cmx எலும்பு ஆழம் அளவில் காணப்பட்டது. அந்த காயத்தின் அடிப்பகுதியில் உள்ள தைராய்டு சவ்வு எலும்பு மற்றும் மூச்சுகுழாய் இரண்டு பக்க கழுத்து தசைகள், மற்றும் இரத்த குழாய்கள் ஆகியன வெட்டப்பட்டு அதனை சுற்றியுள்ள பகுதிகள் ரத்தம் வெளியேறி காணப்பட்டன. இந்த காயத்தின் மேல்ஓரம் 5 செ.மீ. தாடை எழும்பு கீழ்புறமாகவும் இந்த காயத்தின் கீழ் பக்க ஓரம் நடுநெஞ்சு குழியில் இருந்த 6 செ.மீ மேல்புறமாக காணப்பட்டது.

4. தொப்புள் பகுதிக்கு கீழ்புறமாக ஒரு குத்துகாயம் 3x1x உட்புறஆழம் அளவில் காணப்பட்ட அந்த காயத்தின் வழியே உட்புற குடல்களின் ஒரு பகுதி வெளியேறி காணப்பட்டது.

5. இடபக்க கீழ் வயிற்று பகுதியில் ஒரு குத்து காயம் 2.5 cmx0.5 cmx உட்புற ஆழம் அளவில் காணப்பட்டது.

உட்புற கூராய்வு

தலைபகுதியை கூராய்வு செய்து பார்த்ததில் தலையின் மேல்தோல், கபாலம், கபாலத்தின் அடிப்பகுதி ஆகியன இயல்பான நிலையில் காணப்பட்டன. மூளை வீக்கத்துடன் வெளிறி காணப்பட்டது.

கழுத்து பகுதியை கூராய்வு செய்து பார்த்தில் கழுத்தின் உள்ளுறுப்புகள், குரல்வலை எழும்பு உட்பட இயல்பான நிலையில் காணப்பட்டது.

மார்பு பகுதியை கூராய்வு செய்து பார்த்தில் மார்பு கூட்டெழும்புகள் இயல்பான நிலையில் காணப்பட்டன. இருதயம் இயல்பான அளவில் அதன் அறைகள் காலியாக இருந்தது. இரண்டு பக்க நுரையீரல்களும் வெளிறி காணப்பட்டன.

வயிற்று பகுதியை கூராய்பு செய்து பார்த்தில் இரைபையில் சுமார் 200 கிராம் பாதி செறிமானம் அடைந்த உணவு பண்ட்ங்கள் எவ்வித குறிப்பிட்ட வாடையும் இன்றி

காணப்பட்டது. குடலை தாங்கி கொண்டிருக்கும் சவ்வு பகுதியில் 2x0.05 cm அளவிலும் 1.5x0.5 cm அளவிலும் குத்துகாயம் காணப்பட்டது. இந்த காயங்கள் இரண்டும் வெளிப்புற காயம் 4 வுடன் இணைந்த காயங்கள் ஆகும்.

கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகங்கள், இயல்பான நிலையில் வெளிறி காணப்பட்டன. சிறுநீரகபை காலியாக இருந்தது. இடுப்பெழும்பு , முதுகுதண்டுவடம் இயல்பான நிலையில் காணப்பட்டது. உடல் உள்ளுறுப்புகளை சேகரம் செய்த பதப்படுத்தி ரசயான பகுப்பாய்விற்காக அனுப்பபட்டது. ரசயான பகுப்பாய்வு அறிக்கை வேண்டி இறப்புன் காரணத்திற்கான கருத்து நிலுவையில் வைக்கப்பட்டது.

இறப்பிற்கான காலம்

மேற்சொன்ன இறந்த நபர் சடல கூராய்விலிருந்து 18 மணி நேரத்திலிருந்து 24 மணி நேரத்திற்குட்பட்ட காலத்தில் இறந்திருக்கலாம் என்று சான்று வழங்கினேன். ரசயான பகுப்பாய்வு அறிக்கை பெற்ற பின் இறப்பின் காரணத்திற்கான இறுதி கருத்துரையாக மேற்சொன்ன இறந்த நபர் அவருக்கு ஏற்பட்ட பல வெட்டு மற்றும் குத்து காயங்களின் விளைவாக ஏற்பட்ட அதிர்ச்சினாலும், ரத்த வெளியேற்றத்தினாலும் இறப்பு நேர்ந்திருக்கலாம் என்று எனது இறுதி கருத்துரை வழங்கினேன். நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.31. உடல்உள்ளுறுப்பு பரிசோதனை அறிக்கை அ.சாஆ.32. நான் கொடுத்த இறுதி கருத்துரை அ.சா.ஆ.33. காவல் ஆய்வளார் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இறந்த நபர் அவர் இறப்பதற்கு சுமார் 1–1/2 நேரம் முதல் 2 மணி நேரத்திற்குள் கடைசியாக உணவு அருந்திருக்க வாய்ப்புள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன நேரம், சொன்ன விதத்தில் பிரேத பரிசோதனை செய்யவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/– L. Kalaivani,
III Additional District Judge,
Salem.